சிறுமுளை ஊராட்சி மன்ற தலைவர் அவர்களின் நடவடிக்கைகள்

முன்னிலை: திருமதி. சாந்தி

க.எண். 1/02024 நாள்: 25.07.2024

பொருள்:- மனைப்பிரிவு, (மங்களூர்) ஊராட்சி ஒன்றியம், சிறுமுளை ஊராட்சி, புதுக்குளம் கிராமம், சர்வே 27/1B இதில் 1.35 ஏக்கர் (அ) 5467 சதுர மீட்டர் பரப்பளவு கொண்ட மனைப்பிரிவுக்கான இறுதி ஒப்புதல் வழங்கி உத்திரவிடுதல் - சார்பு

பார்வை:- 1) ந.க.எண் :- TCP/8H8K8AFZ/2023 – நாள்:- 28.06.2023

2) இணை இயக்குநர், வேளாண்மை துறை கடித எண். E2/7979/2023

3) அரசாணை எண். 79, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை (UD(3) நாள்:04.05.2017

4) சிறுமுளை ஊராட்சி தீர்மான எண்.15, நாள். 19.06.2024

5) தானப்பத்திரம் ஆவண எண். 1353/2023 நாள்:-20.09.2023

6) இந்தியன் வங்கி திட்டக்குடி, திட்டக்குடி கிளையில் செலுத்தப்பட்டது.

7) தமிழ்மொழி க/பெ வெள்ளையன், க.எண் 3/129, தெற்கு தெரு, புதுக்குளம் கிராமம், திட்டக்குடி அஞ்சல் & வட்டம், கடலூர் மாவட்டம் என்பவரது விண்ணப்பம் வரப்பெற்ற நாள். 19.10.2023

*****

உத்தரவு:

மங்களூர் ஊராட்சி ஒன்றியம், சிறுமுளை ஊராட்சி, புதுக்குளம் கிராமம், சர்வே எண். சர்வே 27/1B இதில் 1.35 ஏக்கர் (அ) 5467 சதுர மீட்டர் பரப்பளவு கொண்ட மனைப்பிரிவுக்கான வரன்முறைப்படுத்திட, பார்வை (3)-ல் காணும் அரசாணையில் தெரிவித்துள்ள வழிகாட்டி நெறிமுறைகளின்படியும் பார்வை (1)-ல் காணும் நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், கடலூர் மாவட்டம் அவர்களின் நடவடிக்கையின் வாயிலாக ஒப்புதல் கடிதம் வரப்பெற்றுள்ளது.

பார்வை (4)-ல் (ம) (5)-ல் காணும் ஊராட்சியின் தீர்மான மற்றும் தான பத்திரம் அமைந்துள்ள இடத்தினை கள ஆய்வு செய்து மனைப்பிரிவினை வரன்முறைப்படுத்த அனுமதி வழங்குமாறு தனது கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

பார்வை (6)-ல் காணும் விவரப்படி புன்செய் வகைப்பாட்டில் இருந்த மனையாக மாற்ற அனுமதி கோரும் இடத்தின் சந்தை மதிப்பில் 3% தொகை நில பயன்மாற்ற கட்டணமாக உரிய அரசு தலைப்பில் செலுத்தி அதற்குண்டான கட்டணம் ரூ. 9315/- மற்றும் கூராய்வு கட்டணம் ரூ. 26000/-(26X1000) இந்தியன் வங்கி திட்டக்குடி கிளையில் செலுத்தி அதற்குண்டான ஆவணங்கள் பின்வரும் விபரப்படி அலுவலகத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

அரசுத் தலைப்பு:- 7386093075

வ.எண்	விஸ்தீர்ணம்	சார்பதிவாளர் சந்தை மொத்த மதிப்பு ரூ. (ச.மீ)	3% நில மாற்று கட்டணம் ரூபாய்
1	1.35 ஏக்கர் (அ) 5467 சதுரமீட்டர்	56.78	9315

(ரூ 9315/-) (ரூபாய் ஒன்பதாயிரத்து முன்னுற்று பதினைந்து மட்டும்)

நிபந்தனைகள்:-

1) "நில உரிமம் குறித்த வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என அறியப்பட்டால் (அ) மனைப்பிரிவு ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின், மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட ஒப்புதல் எவ்விட முன்னறிவிப்புமின்றி ரத்து செய்யப்படும்" என இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது.

2) மனைப்பிரிவில் அமையும் மனையில் கட்டிடங்கள் கட்டுவதற்கு முன் ஒவ்வொரு கட்டிடத்திற்கு நகர் ஊரமைப்பு துரை மற்றும் ஊரக வளர்ச்சித்துறை அனுமதி பெறவேண்டும். மேலும் நீர்நிலைகள் மற்றும் அரசுக்கு சொந்தமான இடங்கள் என தெரியவந்தால் எவ்விட முன்னறிவிப்புமின்றி அனுமதி ரத்து செய்யப்படும்.

3) மேற்படி மனைப்பிரிவிற்கு ஊரக வளர்ச்சித்துறையால் இறுதி ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது என்பதால் மனைப்பிரிவிற்கான இட உரிமை தொடர்பாக வில்லங்கம் ஏதேனும் இருப்பின் உரிய துறையினால் பரிசீலித்து முடிவு எடுக்க வேண்டும்.

4) மேற்படி புதிய மனைப்பிரிவில் தார் சாலை, தெருக்களின் பெயர் பலகைகள் ஆகியன அமைக்கப்பட்டு தானமாக திட்டக்குடி சார்பதிவாளர் ஆவண எண்.1353/2023 நாள்-20.09.2023-ன் படி ஊராட்சி ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது. மனையின் உயர்மின்னழுத்து கம்பிகள் செல்லுமாயின் அதனை மேற்படி மனை உரிமையாளர் தனது சொந்த செலவில் சரிசெய்து தர வேண்டும்.

மேற்காணும் நிபந்தனைகளுக்குட்பட்டு, மங்களூர் ஊராட்சி மற்றும் புதுக்குளம் கிராமம்சர்வே 27/1B இதில் 1.35 ஏக்கர் (அ) 5467 சதுர மீட்டர் பரப்பளவில் அமைந்துள்ள 26 மனைகளுக்கு மட்டும் இறுதி ஒப்புதல் அளித்து உத்திரவிடப்படுகிறது.

தலைவர்
சிறுமுளை ஊராட்சி
சிறுமுளை ஊராட்சி,
மங்களூர் ஒன்றியம்,
கடலூர் மாவட்டம்.

பெறுநர்

தமிழ்மொழி
க/பெ வெள்ளையன்,
க.எண் 3/129, தெற்கு தெரு,
புதுக்குளம் கிராமம்,
திட்டக்குடி அஞ்சல் & வட்டம்,
கடலூர் மாவட்டம்

நகல்:- வட்டார வளர்ச்சி அலுவலர் (ஊராட்சிகள்) மங்களூர் ஊராட்சி ஒன்றியம் அவர்களுக்கு தகவலுக்காகப் பணிந்தனுப்பப்படுகிறது.

நகல்:- உதவி இயக்குநர் (நகர் ஊரமைப்பு) கடலூர் அவர்களுக்குத் தகவலுக்காகப் பணிந்தனுப்பப்படுகிறது.

நகல்:- சார்பதிவாளர் திட்டக்குடி.

நகல்:- வட்டாட்சியர், திட்டக்குடி.